International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஆருரர் தேவாரம் உணர்த்தும் நிலையாமை

**து. சுபஸ்ரீ**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)

**முனைவர் இரா. மணிமேகலை**
இணைப்பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
கோயம்புத்தூர்- 641029

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழிலக்கியங்களில் நிலையாமை என்பது நெடுங்காலமாகவே இருக்கும் கோட்பாடாகும். இக்கோட்பாடானது பக்தியிலக்கியங்களில் மேலோங்கிக் காணப்படுகிறது. உயிருக்கு வினைக்கேற்ப தனு, கரண, புவன மற்றும் போகம் முறையே உடம்பு, கருவிகள், உலகம் மற்றும் அனுபவிக்கும் பொருட்கள் வழங்கப்பட்டு உயிரானது வினைப்பயனை அனுபவிக்கிறது. அதன்மூலம் தன்னை உணர்ந்ததோடல்லாமல் அவை நிலையில்லாதவை என்றும், நிலையான இறையின் திருவடியை அடைந்து உய்தலே பேரின்பத்திற்கு வழியென்றும் உணர்ந்து உயிரானது அதைநோக்கிப் பயணிக்கிறது. இவ்வாறாகமைந்த, நிலையாமை மற்றும் உயிர் உய்யும் வழி பற்றிய கருத்துக்களைச் சமயக் குரவர் நால்வருள் மூன்றாமவரான நம்பியாரூரரின் தேவாரப்பாடல்களின்வழி எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வாகும்.

**முதன்மைச் சொற்கள்**

நிலையாமையின் குறியீடு, தொன்மக் குறியீடு, அறிவுரையின் வழி நிலையாமை விளக்கல், திருவருள்

**ஆய்வு நோக்கம்**

ஆரூரர் தேவாரப் பதிகங்களில் இடம்பெறும் நிலையாமைச் சிந்தனைகளை ஆராய்ந்து, நிலையாமை என்னும் உணர்வின் வழியாக வாழ்வியல்நெறியின் முக்கியத்துவத்தையும் திருவருளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

**ஆருரர் தேவாரம் உணர்த்தும் நிலையாமை** என்னும் இவ்வாய்வில் பகுப்புமுறை ஆய்வு மற்றும் விளக்கமுறை ஆய்வுக் கையாளப்பட்டுள்ளது.

**முன்னாய்வுகள்**

1. பன்னிரு திருமுறையில் வாழ்வியல் கோட்பாடுகள் – கு. தனபாக்கியம் -2008.
2. சுந்தரர் தேவாரத்தில் இயற்கை – கோ. குருசாமி – 2008.

3. சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை – இ.அங்கயற்கண்ணி – 2003.

பன்னிருதிருமுறை மற்றும் ஆரூரர் தேவாரத்தில் மேற்காணும் முன்னாய்வுகள் நிகழ்ந்து உள்ளன. இவற்றினின்று ஆரூரர் தேவாரம் உணர்த்தும் நிலையாமை என்னும் இவ்வாய்வு வேறுபட்டு ஆரூரரின் நிலையாமைச் சிந்தனைகளை விளக்கும் வகையில் புதிதாக நிகழ்த்தப்பெற்றுள்ளது.

## முன்னுரை

வினைக்கேற்ப உயிருக்குக் கொடுக்கப்படும் தனு, கரண, புவன, போகம் யாவும் நிலையில்லாதது. நிலையில்லாததையெல்லாம் நிலையானது என்றெண்ணும் மாயையே, நிலையாமையை உணர முடியாமல் தடுக்கிறது. நிலையாமை என்பது யாக்கை, இளமை, செல்வம், உலகம் என பல நிலைப்படும். அந்தவகையில் உலக இன்பங்களை நுகரப் பயன்படும் கருவிகள் யாவும் நிலையில்லை என ஆரூரர் தம் பாடல்களின் வழியாக பல இடங்களில் பதிவு செய்கிறார். இவ்வாறு அவர் பதிவு செய்த பாடல்களின் விரிவான மெய்யியல் விளக்கத்தை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வு.

## நிலையாமை

பிறப்பு முதல் இறப்புவரையுள்ள இயற்கை நியதிக்கு உட்பட்ட வாழ்க்கையின் உண்மையை உணர்த்தும் தத்துவக்கோட்பாடே நிலையாமையாகும். பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்ட உயிர், உலகின் நிலையில்லாத பொருட்களில் பற்றுகொள்கிறது. பின், அனைத்தும் அழியக் கூடியவை என்பதை உணர்ந்த உயிரானது இறைவனை நோக்கித் திரும்புகிறது. அவனதுதிருவடியே நிலையானதென உணர்கிறது. இவ்வாறு நிலையாமை என்னும் உணர்வுஇறையை அடைவதற்கான முதல் படியாக அமைகிறது.

## நிலையாமையை உணர்த்தும் உவமைகள்

**ஓடுபுணற் கரை யாம் இளமை**

**உறங்கி விழித்தல் ஒக்கும் பிறவி** (7.3.3, பக். 453) என்ற பாடலில் இளமையானது ஓடுகின்ற நீரின் கரைக்கு நிகரானதாகும். நீரின் வேகத்தைப் பொருத்து கரை கரைந்து போவதைப்போல இளமையும் கரைந்து மெலிவுற்று இல்லாமல் போய்விடும் என்றும், தற்பொழுது கிடைத்திருக்கும் பிறப்பு என்பதும் உறங்கி பின் விழித்தல் போலானதே என்றும் நயமாகவும் எளிமையாகவும் உவமைகளோடு எடுத்துரைக்கிறார் ஆரூரர். அடுத்து திருவிடைமருதூர் பதிகத்தில்,

**புல்நுனைப் பனிவெங்கதிர் கண்டார் போலும் வாழ்க்கை** (7.60.3,பக்.934) என்பதில் புல்லின் நுனியிலுள்ள பனித்துளி பகலவனைக் கண்டதும் கரைந்து இல்லாமல் போவது போலாவது இம்மானுட வாழ்க்கை, என்று வாழ்வின் நிலையாமையைச் சுட்டிக்காட்டுகிறார் ஆரூரர்.

## நிலையாமையை உணர்த்தும் குறியீடுகள்

நிவா நதியின் கரைமேல் இருப்பவரே என்று இறைவனை அழைத்துப் பாடிப் பரவுகிறார். இதில்,

**“ஏலம் இலவங்கம் எழில் கனகம்**
**மிகவுந்தி வரும் நிவவின் கரைமேல்**
**நீலம்மலர் பொய்கையில் அன்னம் மலி**
**நெல்வாயில் அறத்துறையாய் ஒரு நெல்**
**வாலுன்ற வருந்தும் உடம்பிதனை**
**மகிழாதழகா அலந்தேன் இனியான்**
**ஆலந் நிழல் அமர்ந்தாய் அமரா**
**அடியேன் உய்யப்போவதோர் சூழல்**
**சொல்லே”** (சுந்.தேவ.27, பக்.473)

இதில் **ஆலந் நிழல் அமர்ந்தாய்** என அழைப்பதற்கு காரணம் உலகியல் உண்மைகளை எடுத்துக் கூறுவதற்காகவும், மெய்யியலை உணர வைப்பதற்காகவும் இறைவன் ஆல நிழலின் அடியில் சந்தான குரவர்களுக்கு காட்சி தந்து உபதேசித்தார். எனவேதான் நிலையாமை என்னும் தத்துவத்தை உணர ஆல நிழலில் உள்ள இறைவனின் திருவருளை வேண்டுகிறார் ஆரூரர். இங்கு **ஆலந்நிழல் என்பது நிலையாமையின் குறியீடாகும்.** மேலும்,

**“சிகரம் முகத்தில் திரளார் அகிலும்**
**மிகவுந்தி வருந்நிவவின் கரைமேல்**

**நிகரில் மயிலாரவர் தாம்பயிலும்**

**நெல் வாயில் அறத்துரை நின்மலனே**

**மகரக்குழைவாய் மணக்கோலமதே**

**பிணக்கோலமதாம் பிறவி இதுதான்**

**அகரம் முதலில் எழுத்தாகி நின்றாய்**

**அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே"** (சுந்.தேவா.28, பக்.474)

இவ்விடம்பிற்கு மணக்கோலம் என்று ஒன்று இருக்குமேயானால் பிணக்கோலமும் நிச்சயம் உண்டு. மேலும் இவ்வுடல் என்பது நிச்சயம் அழியக்கூடியது என்கின்ற உண்மையைப் புரிந்துகொள்ளுமாறு உணர்த்தும் பாடல் இது. இதில், **அகரம் முதலில் எழுத்தாகி நின்றாய்** எனச் சொல்லக்காரணம் எல்லா எழுத்தும் **அ** என்பதுதிலிருந்துதான் தோன்று கிறது என்பதுபோல எல்லா உயிர்களும் இறைவனிடத்திலிருந்து தோன்றுகிறது. தோன்றும் இடத்திலேயே எல்லாம் ஒடுங்கிப் போவதுபோல உயிர்களும் வீடுபேறு என்னும் நிலைத்த இன்பத்தை பெற்று தோற்றம் ஆகிய இறைவனிடத்திலேயே ஒடுங்கிப் போகின்றன என்னும் கருத்தை உணர வைக்கவே **அகரத்தைப்** பயன்படுத்தி உள்ளார் ஆரூரர்.

**"கோடுயர் கோங்கலர் வேங்கைஅலர்**

**மிகவுந்தி வருந் நிவவின் கரைமேல்**

**நீடுயர்சோலை நெல்வாயில் அரத்துறை**

**நின்மலனே நினைவார் மனதாய்**

**ஓடுபுணற் கரை யாம் இளமை**

**உறங்கி விழித்தல் ஒக்கும் பிறவி**

**வாடி இருந்து வருந்தல் செய்யாது**

**அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே"** (சுந்.தேவா.25, பக்.472)

**நின்மலனே என்பது நிலையாமையின் குறியீடாகும்.** நின்மலன் என்பது பண்பைக் குறிக் கூடிய சொல் மட்டுமல்லாமல் இறைவன் மும்மலங்களினின்றும் எவ்விதத் தொடர்பும் இல்லாதவன் என்பதை உணர்த்தும் தத்துவ மாகும். இப்பாடலில் நின்மலனாய் விளங்கக் கூடியவனான இறைவனை நினைத்துவாழும் அடியவனான யான் இம்மலங்களினின்று விடுபடுதல் வேண்டும் என வேண்டுகிறார். இதில் நின்மலன் என்பதில் தானும் அந் நிலையை அடைவதற்கான குறியீடாக ஆரூரர் பயன்படுத்தியுள்ளார்.

**"செடிகொள் ஆக்கை சென்று சென்று**

**தேய்ந்தொல்லை வீழாமுன்**

**வடிகொள் கண்ணார் வஞ்சனையுட் பட்டு மயங்காதே**

**கொடிகொள் ஏற்றார் வெள்ளை நிற்றார்**

**கோவண ஆடையுடைய அடிகள்"** (சுந். தேவா.64, பக்.506)

**வெண்ணீறு, கோவண ஆடை ஆகியவை நிலையாமையினைக் குறிக்கும் குறியீட்டுச் சொற்களாகும்.** துன்பத்தைக் கொண்ட இந்த உடலானது உலக வாழ்க்கையில் உழன்று உழன்று மெலிந்து விரைந்து அழியக்கூடியது. இதனை உணர்ந்து எதிர்கொள்பாடியில் உள்ள இறைவனை அடைவோம் என்று நெஞ்சிற்கு உணர்த்தும் பாடல் இது. மேற்காணும் பாடல்களில் **அமரன், ஆலந் நிழல், நின்மலன், வெண்ணீறு, கோவண ஆடை** ஆகிய சொற்றொடர்கள் நிலையாமை யின் குறியீடாகவே ஆரூரர் பயன்படுத்தி யுள்ளார்.

**நிலையாமையை உணர்த்தும் தொன்மக் குறியீடு**

**"அரித்து நம்மேல் ஐவர் வந்திங்கு**

**ஆறலைப்பான் பொருட்டால்**

**சிரித்த வாய் பரிவாய் வெண்டலை போய் ஊர்ப்**

**புறச் சேராமுன்**

**வரி கொடுத்துத்திவ் வாள்ய ரக்கர்**

**வஞ்ச மதில் மூன்றும்**

**எரித்த வில்லி எதிர்கொள்பாடி**

**என்பது அடைவோமே"** (சுந். தேவா.66, பக்.507)

இப்பாடலில் ஐம்புலன்களால் கிடைக்கக்கூடிய நிலையில்லாத சிற்றின்பத்தை விடுத்து பேரின்பமாகிய இறைவனின் திருவடியை அடைவோம் என்றும், யாவரும் இகழக் கூடிய அல்லலில் வீழாமல் இருப்போம்

என்றும் இறைவன் ஒருவனே முதலானவன் அவனே நிலையானவன் என உணர வேண்டும் என்றும் நெஞ்சத்தினை பக்குவப் படுத்தும் வகையில் அமைகிறது இப்பாடல். இதில் **"மதில் மூன்றும் எரித்த"** என்ற தொன்மத்தை இங்கே பயன்படுத்தக் காரணம் அவர்கள் மூவரின் ஆணவமும் ஆசையுமே அவர்களின் அழிவிற்கு காரணமாய் போனது. ஆகவே, இவர்களைப் போல் நாமும் **ஆசைக்கு மனதினுள் இடம் கொடுத்தோமேயானால் அழிவுநிச்சயம்** என்பதை உணர்த்தவே இந்த சொற்றொடரை இங்கு ஆரூரர் பயன் படுத்தியுள்ளார்.

**அரசருக்கு அறிவுரை கூறுதல்**

திருஎதிர்கொள்பாடி என்னும் தலத்திற்கு செல்லும்வழியல்,

**“மத்த யானையேறி மன்னர்**

**சூழ வருவீர்கள்**

**செத்த போதில் யாருமில்லை**

**சிந்தையுள் வைம்மீன்கள்**

**வைத்த உள்ளம் மாற்ற வேண்டா**

**விம்மின் மனத்தீரே”**

(சுந். தேவா.62, பக்.504)

யானையின் மீது ஏறி சிற்றரசர்கள் சூழ பவனி வருகின்றவர்களே நீங்கள் இறந்ததற்குப் பிறகு உங்களுடனே யாரும் வரப்போவதில்லை என்றுணர்தல் வேண்டும் என்று அரசர்களுக்கு அறிவுரை கூறுகிறார். **அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி** என்றவாறு அரசன் நிலையாமை உணர்ந்து பின்பற்றினால் மக்களும் அதனைப் பின்பற்றி உய்யும் வழியினை அடைவார்கள் என்பதற்காகவே அரசனுக்கு அறிவுரை கூறுகிறார் ஆரூரர்.

**மனத்திற்கு நிலையாமையை உணரவைத்தல்**

**“தோற்றம் உண்டேல் மரணம் உண்டு**

**துயரமனை வாழ்க்கை**

**மாற்றம் உண்டேல் வஞ்சமுண்டு**

**நெஞ்ச மனத்தீரே**

**நீற்றார் ஏற்றார் நீல கண்டர்**

**நிறைபுனல் நீள்சடைமேல்**

**ஏற்றார் கோவில் எதிர்கொள்பாடி**

**யென்ப தடைவோமே”.**

(சுந். தேவா.63, பக்.505)

தோற்றம் உள்ளதெனில் மரணம் என்பதும் உள்ளது. இங்கு இதனை மனதிற்குக் கூறக் காரணம், மனம்தான் ஒருநிலைப்பாட்டில் இல்லாமல் அனைத்தின்மீதும் பற்றுதலும் நாட்டமும் கொண்டு மாயையிலே உயிரினை உழலச் செய்து உய்யும் வழியினை மறைக்கிறது. ஆக, மனதினை கட்டுப்படுத்திக் கொண்டோமேயானால் துன்பம் என்பது நெருங்காது என்கிறார் ஆரூரர். உலக வாழ்க்கை நிலையில்லாததை முதலில் உணரவேண்டியது மனம்தான் என்கிறது இப்பாடல்.

**தற்சுட்டு உத்தி**

**ஆசிரியர் தன்னுடைய அனுபவம், உணர்வுகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு உலகிற்கு பொதுவான உண்மையை உணர்த்துவது தற்சுட்டு உத்தியாகும்.** இவ்வுத்தியினை ஆரூரர் தம் பாடல்களில் ஆரூரர் பயன்படுத்தி நிலையாமையை உலகிற்கு உணர்த்த முற்படுகிறார்.

**“ஊன்மிசை உதிரக்குப்பை**

**ஒருபொருள் இலாத மாயம்**

**மான்மறித்து அனைய நோக்கின்**

**மடந்தையார் மதிக்கும் இந்த**

**மானுடப் பிறவி வாழ்வு**

**வாழ்வதோர் வாழ்வு வேண்டாம்**

**ஆனல்வெள் ளேற்ற ஆரூர்**

**அப்பனே அஞ்சினே”**

(சுந்.தேவா.பா74, பக்.515)

இறைச்சியை உள்ளடக்கி ஓடுகின்ற குருதியை உடைய உடம்பானது நிலையில்லாமல் மாயையாய் அழிந்து போகக் கூடியது. இவ்வாறாக வாழும் மானிடப் பிறவியை, மானுட வாழ்வை நான் வாழ விரும்பவில்லை என்று தன் அனுபவத்தின்வழி பெற்ற உண்மையைக் கூறுகிறார். அதாவது தான் வாழ்ந்து பார்த்த இம்மானுட வாழ்வானது நிலையில்லாதது, பேரின்பத்தை தர

இயலாதது என்பதனை நான் உணர்ந்து விட்டேன் என்றும், உலகத்திலுள்ளோரும் இவ்வுண்மையை உணர வேண்டும் என்பதே ஆரூரரின் உள்ளர்த்தம். மேலும்

**மணமென மகிழ்வார் முன்னே**

**மக்கள் தாய் தந்தை சுற்றம்**

**பிணமனச் சுடுவர் பேர்த்தே**

**பிறவியை வேண்டேன் நாயேன்**

**பணையிடச் சோலை தோறும்**

**மைப்பொழில் விளாகத்து எங்கள்**

**அணைவினைக் கொடுக்கும் ஆரூர்**

**அப்பனே அஞ்சினேனே"**

(சுந்.தேவா. பா.78 பக்.517)

உலகத்தில் தமக்கென உள்ள தாய், தந்தை, சுற்றத்தார் என்போர் இளமையில் தம் மக்களுக்கு திருமணம் நிகழவேண்டும் அல்லது நிகழ்கிறது என மகிழ்வார்கள். பின்பு அவர்களே முதுமையில் அவர்களை பிணம் என்று சொல்லி ஊரினின்றும் அகற்றி புறம்காட்டில் கொண்டுபோய் எரிப்பர். இத் தன்மைதாகிய நிலையில்லாத உடம்பினை ஏற்ற இந்தப்பிறவினை அடியேன் விரும்ப வில்லை என்று **தன்னுணர்வைப் பகிர்வத னால் வாயிலாக நிலையான இன்பமாகிய இறையின் திருவடியை அனைவரும் அடைதல் வேண்டும் என்ற உண்மையினை உலகம் உணர தற்சுட்டு உத்தியை பயன் படுத்திப் பாடுகிறார் ஆரூரர்.**

**பேரின்பநெறிக்கு வழி**

**"சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்**

**தன்னருள் தந்த எம்தலைவன்"**

(7.58.1, பக்.909.)

சாதலும் மீண்டும் பிறத்தலும் இல்லாத நிலையினைத் தனக்குக் கொடுத்தது தன்னுடைய தலைவனான இறையின் திருவருள் என்கிறார் ஆரூரர். மேலும், திருவிடைமருதூர் பதிகத்தில்,

**"அழிப்பர் ஐவர் புரவுடையார்கள் ஐவரும் புரவாசற ஆண்டு**

**கழித்துக் காற்பெய்து போயின பின்னைக் கடைமுறை உனக்கே பொறையானேன்**

**விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன் வேண்டேன் மானுட வாழ்க்கை ஈதாகில்**

**இழித்தெனென்றனக் குய்வகையருளாய் இடைமருதுறை எந்தைப்பிரானே"**

(7.60.5, பக்.936)

நன்னைகளை அழிக்கக் கூடிய ஐம்புலன்கள் இவனால் பயனில்லை என்று கழித்து இறையின் கால்கீழ்ப் போட்டுவிட்டு சென்ற பின், இம்மானுட வாழ்க்கை தேய்ந்து அழிந்து போகக் கூடியது என்றும் உன்னருளே அதனின்று விடுபட்டு உய்யவதற்கானவழி என்ற உண்மையினை அறிந்துகொண்டேன் என்கிறார் ஆரூரர். ஐம்புலன்களால் விளையக் கூடியது வினை. இவ்வினையே பிறவியாகிய கடலில் உழலச் செய்கிறது. ஆனால் அருளோ பிறவியாகிய கடலினில் நீந்தி வீடுபேறு என்னும் கரையைக் காட்டுகிறது. ஆக, இறையின் அருளே இவற்றினின்று விடுபட்டு நிலைபேறான இன்பத்தினை அளிக்கிறது என்கிறார் ஆரூரர்.

இதனையே உண்மை நெறி விளக்கமும்

"எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்(து) இங்(கு)

எய்தும் உயிர் தனைக்கண்(டு) இவ் வுயிர்க்கு மேலாம்

ஒப்பில்அருள் கண்டுசிவத்(து)உண்மை கண்டு

உற்றதெலாம் அதனாலே பற்றிநோக்கித்

தப்பினைச்செய் வதும்அதுவே நினைப்பும்அது தானே

தரும் உணர்வும் பொசிப்பும்அது தானே ஆகும்

எம்பொருளும் அசைவில்லை யெனஅந்தப் பொருளோடு

இயைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே."

(உண்.விளக். பா.5, பக்.17)

உலகில் அறிவுடைய பொருளாயினும் அறிவற்ற பொருளாயினும் அவை நிலையில் லாதது என்றும் அவை மாயையின் செயல் என்றும், அவை துன்பத்திற்கு வழிவகுக்கு

மென்று உயிரானது உணர்ந்துகொள்ள இறையின் திருவருளே துணையாய் அமை கிறது. ஆக, அதனைப் பற்றியிருத்தலே பேரின்பத்திற்கு வழி என்கிறது இப்பாடல். இதனையே காரைக்காலம்மையாரும்,

**"அருளே உலகெலாம் ஆள்விப்பதீசன்**

**அருளே பிறப்பறுப்பதனால்"**

(அற்.திரு.பா.9, பக்.)

உலகெல்லாம் ஆள்விப்பதும் உயிர்களின் பிறவி நோயைப் போக்குவதும் இறையின் திருவருளேயாகும் என்று அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுகிறார்.

உயிரானது பாசத்தினின்று விடுபட்டு மெய்யறிவைப் பெற இறையின் அருளே உதவுகிறது என்பது சித்தாந்தத்தின் மையக் கோட்பாடாகும். இதனையே ஆரூரரும் தம் பாடல்கள் பலவற்றில் பதிவுசெய்கிறார்.

## முடிவுரை

இப்பிறவியில் இவ்வுடம்பினை நிலையென்று எண்ணி இல்வாழ்க்கையின் மீது மையல் கொண்டு துன்புற்று இருத்தல் வேண்டா. மேலும், இந்த பிறவியில் நிலையான இன்பத்தை தரக்கூடிய இறைவனின் திருவருளை வேண்டி நின்றோமேயானால் நிலையான இன்பமாகிய வீடு பேற்றை இறைவன் வழங்குவான் என்பது திண்ணம்.

## ஆய்வுப் பயன்

நிலையாமை என்னும் உணர்வு இறையை அடைவதற்கான முதற்படி என்பதை உயிர்கள் உணர்தல் வேண்டும். அவ்வுணர்வே உயிர் பற்றுக்களினின்று நீங்கி இறையை அடைய வழிவகுக்கும் என்பதே ஆய்வின் பயன்.

## எதிர்கால ஆய்வுகள்

**சுந்தரர் தேவாரத்தில் உள்ள மெய்யியல் சிந்தனைகள்.**

**சுந்தரர் தேவாரத்தில் யோகநெறி.**

என்னும் தலைப்புகளில் எதிர்கால ஆய்வு களை மேற்கொள்ளலாம்.

## துணைநூற் பட்டியல்

1. **உண்மைநெறி விளக்கம்** - ஆசிரியர் சீர்காழி தத்துவநாதர் – காசித் திருமடம், திருப்பனந்தாள், தஞ்சை – பதிப்பாண்டு 2006.
2. **சுந்தரர் ஓர் ஆய்வு** – ஆசிரியர் வை.ரத்தினசபாபதி – சென்னைப் பல்கலைக்கழகம் – பதிப்பாண்டு 1986.
3. **சுந்தரர் தேவாரம்** – ஏழாம் திருமுறை – ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை – முனைவர் சி. அருணைவடிவேலு முதலியார் உரை – பதிப்பாண்டு 2011.
4. **சுந்தரர் தேவார ஒளிநெறிக் கட்டுரை**- ஆசிரியர் தணிகைமணி செங்கல்வராய பிள்ளை- தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – பதிப்பாண்டு 1962.
5. **சைவ சமய வளர்ச்சி** – ஆசிரியர் மா.இராசமாணிக்கனார் – பூங்கொடி பதிப்பகம், சென்னை – பதிப்பாண்டு 1999.
6. **சைவ சித்தாந்த வரலாறு** – ஆசிரியர் க.வெள்ளைவாரணனார் – இராமையா பதிப்பகம், சென்னை -14 – பதிப்பாண்டு 2016.
7. **சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்** - சுப்பு ரெட்டியார், ந. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட் : சென்னை 2001
8. **சைவ சித்தாந்தத்தின் அடிப்படை** – வ.ஆ. தேவ சேனாதிபதி, இராதா கிருஷ்ணன் – பதிப்பதிகம் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னை பல்கலைக்கழக வெளியீடு.
9. **பதினொராந் திருமுறை மூலமும் உரையும்** – உரையாசிரியர் புலவர் பி.ரா.நடராசன் – உமா பதிப்பகம், சென்னை – பதிப்பாண்டு 2022.
10. **பன்னிரு திருமறை வரலாறு** - ஆசிரியர் க.வெள்ளைவாரணனார்-அண்ணாமலைப் பல்கலைக்கழகம் -1969.